## அறிவித்தல்

## மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஐஐஐ ஆட்சேர்ப்பு 2020/2021(2023)

19.04.2024 திகதி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டஇலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III ற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 2020/2021(2023) ஆட்சேர்ப்புக்கான ஒவ்வொரு பாடத்தின் கீழும் பொது நேர்முகப்பரீட்சைக்காக ஆட்சேர்ப்பு அறிவிப்பின் படி தகுதியான விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் இன்படி பொது நேர்முகப்பரீட்சை மற்றும் வாய்மூல நேர்முகப்பரீட்சையின் திகதிகள் மற்றும உரிய நேரங்கள் குறிப்பிடப்பட்ட அழைப்புக் கடிதங்கள் விண்ணப்பதாரர்களால் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுக்கு தற்போது அனுப்பப்படுகின்றன. (அழைப்புக் கடிதத்தின் மாதிரி வடிவம், நேர்முகப்பரீட்சை நடக்கும் திகதி மற்றும் உரிய நேரங்களைக் குறிப்பிடும் ஆவணம் இத்துடன் காட்டப்பட்டுள்ளது)

விண்ணப்பதாரர்கள் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து, அந்தந்த திகதிகளில் குறிப்பிட்ட நேரத்தில் அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி நேர்முகப் பரீட்சை சபையிடம் தோற்ற வேண்டும். ( தமக்காக குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு வர வேண்டியது கட்டாயமானதாகும்.)

அன்றைய தினம், அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் மூலப்பிரதிகள் கோண்ட கோப்பொன்றையும், அந்த ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட புகைப்பட பிரதிகள் அடங்கிய இணையான கோப்பினில் நேர்முகப் பரீட்சை இலக்கம் மற்றும் சபையின் இலக்கம் குறிப்பிடப்பட்டு அந்தக் கோப்பையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். (கோப்பு அட்டையானது தொடர்புடைய நிறத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு கோப்பு அட்டை எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டும் வடிவமும் இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது.) அனைத்து சான்றிதழ்கள;/ஆவண நகல் பிரதினின் மீது உண்மைப் பிரதிகள் என சான்றளிக்கப்பட வேண்டும்.

அழைப்புக் கடிதத்தின் இலக்கம் 03-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துணை எண்களான VII, IX, X ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து நேர்முக சபையிடம் திட்டமிட்ட திகதியில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு நேர்முகப் பரீட்சையின் போதே சமர்ப்பிக்கப்பட வேண்டிய இந்த மாதிரி படிவங்கள் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் பொறுப்பேற்கப்படாது என்பதால் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து உடனடியாக பூர்த்தி செய்து கொள்வது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்)

கவனத்திற்கு: நேர்முகப் பரீட்சை திகதிக்குள் அழைப்புக் கடிதம் கிடைக்கவில்லை என்றால், இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கடிதத்தை சமர்ப்பிக்கவும்.